பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 06 2026** **FRIDAY** **6.45 AM**

## மாநில செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

**1.** யோகக்கலை மனித குலத்திற்கு இந்தியா வழங்கிய விலைமதிப்பில்லாத பரிசு என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

**2.** நாட்டின் வளர்ச்சிக்கும், சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் கல்வி அடித்தளமாக உள்ளது என்று மாநில அமைச்சர் திரு ராஜ்குமார் கூறியுள்ளார்.

**3.** திருப்பரங்குன்றம் விவாகரத்தில் தனது நிலைப்பாட்டை தமிழக அரசு தெரிவிக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

**4.** தென்மேற்கு பருவமழை காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** **Ulaanbaatar** ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<<>>>>>>>

யோகக்கலை மனித குலத்திற்கு இந்தியா வழங்கிய விலைமதிப்பில்லாத பரிசு என்று பிரதமர் திரு நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில் உலக யோகாசன சாம்பியன் போட்டியை காணொலி மூலம் தொடங்கிவைத்து அவர் உரையாற்றினார்.

இந்த போட்டி உலக விளையாட்டுகளின் அடையாளமாக உருவெடுக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இது இளைஞர்களுக்கு பெருமளவிலான வாய்ப்புகளை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

யோகாசன போட்டிகளை உலக அளவில் விரிவுபடுத்துவதன் மூலம், தடகள வீரர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இதன்மூலம், யோகாசன பயிற்சியாளர்கள், விளையாட்டு அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் நிகழ்ச்சி மேலாளர்களுக்கு வாய்ப்புகளையும் வழங்கிடும் என்று அவர் கூறினார்.

சுகாதாரமான வாழ்வியல் முறைக்கு நீண்டகால தீர்வாக யோகக்கலை சிறந்த தேர்வாக அமையும் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

யோகாசன பயிற்சி, மனம், உடல் ஆகியவற்றுக்கு புத்துணர்வு அளிப்பதுடன், உலக நல்லிணக்கத்திற்கு உத்வேகம் அளிப்பதாகவும் உள்ளது என்று அவர் கூறினார்.

அனைத்து நோய்களுக்குமான சிறந்த தீர்வாக யோகக்கலை திகழும் என்பதை வலியுறுத்தும் வகையில் யோகா 365 பிரச்சாரத்தை மத்திய ஆயுஷ் அமைச்சகம் தொடங்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த முன்முயற்சியின் தூதுவர்களாக தடகள வீரர்கள் பங்கேற்க வேண்டும் என்று பிரதமர் அழைப்பு விடுத்தார்.

ஒலிம்பிக் உள்ளிட்ட உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் யோகாசன போட்டி இடம்பெறுவதற்கு இது முக்கிய பங்கு வகிக்கும் என்று திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் வளர்ச்சிக்கும், சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் கல்வி அடித்தளமாக உள்ளது என்று மாநில வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

கடலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், மாணவர்கள் கற்றல் திறனுடன், ஒழுக்கத்தையும் கடைபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் பிற துறைகளிலும் மாணவர்கள் தங்களது திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மாணவர்களின் கல்விக்கு பொருளாதாரம் தடையாக இருக்கக் கூடாது என்பதை கருத்தில்கொண்டு, பாடப்புத்தகங்கள், சீருடைகள் உள்ளிட்ட கல்விக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

முன்னதாக, அம்மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணவ, மாணவியருக்கு பாடப்புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், சீருடைகள் வழங்கும் பணியை திரு ராஜ்குமார் தொடங்கிவைத்தார்.

<<<<<<<>>>>>>>

திருப்பரங்குன்றம் விவாகரத்தில் தனது நிலைப்பாட்டை தமிழக அரசு தெரிவிக்க வேண்டும் என்று பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், அனைத்து மக்களுக்குமான அரசாக தவெக செயல்பட வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

போலி மதச்சார்பின்மையை தவிர்த்து, தமிழர் பண்பாட்டை பாதுகாப்பதற்கு மாநில அரசு முன்வர வேண்டும் என்று திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<<>>>>>>>

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் ஜூன் ஐந்தாம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இத்தினத்தையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சேலம் மாவட்டத்தில் சுற்றுச்சூழல் மன்றம் வாயிலாக 50 ஆயிரம் விதைப்பந்துகளை மாணவர்கள் உருவாக்கியுள்ளதாக பேராசிரியர் பிருந்தா தேவி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — பிருந்தா தேவி - 40 Sec. )***

கடும் வெப்பத்தை குறைப்பதற்காக அனைவரும் மரக்கன்றுகளை நட முன்வர வேண்டும் என்று அம்மாவட்டத்தை சேர்ந்த மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

***(Sound Byte — மாணவர் - 30 Sec. )***

<<<<<<<>>>>>>>

மாணவர்களுக்கு இலவச லேப்டாப் வழங்குவதற்கான விண்ணப்பங்களை மத்திய அரசு பெற்று வருவதாக சமூக ஊடகங்களில் பரவிவரும் செய்திகள் தவறானவை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய பத்திரிகை தகவல் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேசிய மாணவர் லேப்டாப் திட்டத்தின்கீழ், இலவச லேப்டாப்புகள் வழங்கப்படும் என்ற செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானது என்று தெளிவுபடுத்தியுள்ளது.

இதுபோன்ற விளம்பரங்கள் அல்லது திட்டம் எதுவும் மத்திய அரசிடம் இல்லை என்று அந்த செய்திக்குறிப்பு உறுதி செய்துள்ளது.

தனிநபர் அல்லது நிதிசார்ந்த தகவல்களை பெறுவதற்கான முயற்சிகளின் ஒருபகுதியாக இத்தகைய செய்திகள் ஊடகங்களில் பரப்பப்பட்டு வருவதாக அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

<<<<<<<>>>>>>>

தென்மேற்கு பருவமழை காரணமாக தமிழகத்தின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி, கோவை, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, தமிழகம், புதுவை, காரைக்கால் பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களில் அதிகபட்ச வெப்பநிலை நான்கு டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்று அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<<<>>>>>>>

***இருவரிச் செய்திகள்***

காசா நகரைக் குறிவைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், பாலஸ்தீனியர்கள் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

--------------

தென்கிழக்கு லெபனானில், **Marjayoun** பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஐ நா அமைதிக்குழுவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளது குறித்த விசாரணையை ஐ நா உள்நாட்டுப் பாதுகாப்புப் படை தொடங்கியுள்ளது.

--------------

இந்தியா - ஐரோப்பிய யூனியன் நாடுகளிடையே, வர்த்தகம், முதலீடு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு வலுவடையும் என்று வெளியுறவுத் துறை செயலர் திரு சிபி ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

--------------

நாகலாந்து மாநிலத்தில் இயற்கை வேளாண் விளை பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை அம்மாநில ஆளுநர் திரு நந்த் கிஷோர் வலியுறுத்தியுள்ளார்.

--------------

வடகிழக்கு பொருளாதார வழித்தடம் அமைப்பதற்கான பணிகளை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று மிசோரம் மாநில முதலமைச்சர் திரு **Laldhoma** கேட்டுக்கொண்டுள்ளார்.

--------------

மதுரை மாவட்டத்தில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில் நடைபெறும் செயல்பாடுகள் குறித்து மாநில வணிகவரி மற்றும் பத்திர பதிவுத் துறை அமைச்சர் ஆய்வு செய்தார்.

--------------

ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் அருகே உள்ள கிராமப்புறங்களில், கால்நடைகளை வேட்டையாடி வரும் சிறுத்தையைப் பிடிக்க பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் வனத்துறையினர் கேமராக்களைப் பொருத்தியுள்ளனர்.

--------------

திண்டுக்கல்லில் மருந்து விற்பனை கடைகளில் அதிக போதை தரும் டானிக், மாத்திரைகளை விற்பனை செய்த மூன்று பேரை காவல் துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

--------------

திருப்பூர் மாவட்டம் பொங்கலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்புத் துறையினர் மேற்கொண்ட சோதனையில் கணக்கில் வராத **2** லட்சத்து **53** ஆயிரம் ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது.

--------------

மாநில அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருட்கள் விற்பனை செய்யப்படுவது குறித்து தாம்பரம், சேலையூர் சரக காவல்துறையினர் ஆய்வு மேற்கொண்டனர்.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Ulaanbaatar** ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா இரண்டு தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

ஆடவர் **87** கிலோ எடைப்பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் சுனில் குமார் **4-3** என்ற புள்ளிக்கணக்கில், கிர்கிஸ்தானின் **Azat Salidinov** -வை வென்று இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

**97** கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் நிதிஷ் குமார், **13-9** என்ற புள்ளிக்கணக்கில், கஜகஸ்த்தானின் **Nurassyl Amanaly**-ஐ வென்றார்.

<<<<<<<**END**>>>>>>>